**பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டம் - 2023**

---

பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது.

ஊவா மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தின் தொடர்பை மேம்படுத்தி, பேராதனை – பதுளை - செங்கலடி வீதியின் பதுளை முதல் செங்கலடி வரையிலான 147 கிலோமீற்றர் வீதியை புனரமைப்பதன் மூலம் அப்பிரதேசத்தின் போக்குவரத்தை மேம்படுத்தி பொருளாதார நடவடிக்கைகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,200 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 140 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ஐ.அ.டொலர் 20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 12 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2025 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டுக் கடன் மீதி மற்றும் நடைமுறை வேலை என்பன அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 348.61 | கடன் உடன்படிக்கை திறைசேரி மற்றும் கொடை வழங்கும் முகவரால் கைச்சாத்திடப்பட்டதால், வெளிநாட்டுக் கடன் தொடர்பான வட்டிக் கட்டணங்கள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட தனி செலவின வாக்குப்பணத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. எனவே, இது செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் செலவினமாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2013 நவம்பர் 23 ஆம் திகதிய 230/2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயறிட்ட நிதிக்கூற்றுக்களில் வட்டி கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 04 இன் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களை கையகப்படுத்துதல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி செய்தல் ஆகியவற்றுக்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய கடன்பெறல் கிரயம், அந்த சொத்துக்களின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்பட வேண்டும். எனினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான RDA கடனுடன் தொடர்புடைய கடன்பெறுதல் கிரயத்தை இந்த செயற்திட்டம் மூலதனமாக்கியிருக்கவில்லை. | 2.54 | இந்த கடன் செயற்திட்டத்தால் அல்ல, வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் (RDA) பெறப்பட்டது. இதன் விளைவாக, கடன் பெறுதல் கிரயம் RDA இன் பொறுப்பாகும். நடைமுறை வேலையின் கீழ் RDA இந்த கடன் பெறுதல் கிரயத்தை கணக்கீடு செய்கிறது. செயற்திட்டம் பூர்த்தியடைந்து RDA இடம் ஒப்படைக்கப்பட்டதும் அவர்கள் செயற்திட்ட கிரயத்தையும் அதனுடன் தொடர்புடைய கடன் பெறுதல் கிரயங்களையும் மூலதனமாக்குவார்கள். | 2013 நவம்பர் 23 ஆம் திகதிய 230/2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கடன் பெறுதல் கிரயம் செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | லஹுகல முதல் பிபில வரையிலான பொதியானது பரஸ்பரம் இணங்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் நிறுத்தப்பட்டதென கூறப்பட்டிருந்த போதிலும், பரஸ்பர நிறுத்தத்திற்கு செயற்திட்டம் முன்வைத்த கோரிக்கையின் பேரில் சட்டமா அதிபரின் கருத்து நிலுவையில் உள்ளது. எனவே, 2022 முதல் ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய தொகையின் சரியான தன்மையை கணக்காய்வின் போது கண்டறிய முடியவில்லை. | 35.57 | ரூபா 35.57 தொகை குறைபாட்டு பொறுப்புக் காலப்பகுதிக்கு பின்னரும் துணை உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்படும் இறுதிப் பணம் ஆகும். மற்றொரு ஒப்பந்ததாரரைத் தெரிவுசெய்வதற்கான மீள்கேள்வி மற்றும் பெறுகை நடைமுறையுடன் தொடர்புடைய செலவைக் கழித்த பின்னர் இந்தத் தொகை TEC ஆல் முடிவு செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் பரஸ்பர நிறுத்தலின் இணக்கத்தை சரிபார்ப்பதற்கு முறையான விசாரணை நடாத்தப்பட வேண்டும். |
| (ஈ) | நீதிமன்றத்தின் முடிவுகளுக்குப் பின்னர் 419 காணித்துண்டுகளின் இழப்பீடு தொடர்பான எதிர்கால கடப்பாடுகளிற்காக இந்த செயற்திட்டம் நீதிமன்ற வைப்புக்களை வைப்பு செய்திருந்தது. எனினும், அந்த எதிர்கால கடப்பாடுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 13.03 | இழப்பீட்டுக்கான நீதிமன்ற வைப்புக்கள் இழப்பீட்டு கொடுப்பனவுகளாகவும் வகைப்படுத்தப்படுகின்றன. எதிர்கால நிதிக்கூற்றுக்களில் அதனை கணக்குகளுக்கான ஒரு குறிப்பாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்கால கடப்பாடுகள் பற்றிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 9.3 ஆம் பிரிவு | குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் இரண்டு செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | மீளாய்வாண்டில் இரண்டு செயற்திட்டங்கள் மாத்திரமே நடைபெற்று வருகின்றன, ஏனைய செயற்திட்டங்கள் பெறுகை நிலையில் இருந்தன. ஆண்டின் போது நடாத்தப்பட்ட குறைந்தபட்ச வழிநடாத்தல் குழுக் கூட்டத்தின் பங்குதாரருடன் கலந்துரையாடுவதற்கு எந்தப் பிரச்சினையும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்குதல். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

**(i) வீதி புனரமைப்பு**

| கூறு | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் (கிமீ) | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் (கிமீ) | | |
| நெடுஞ்சாலைகள் | வீதி புனரமைப்பு | 146.75 | 128 | 18.75 கிமீ நீளமுள்ள வீதியின் நிர்மாணப் பணி தாமதமாகியிருந்தது. | ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல். |

**முகாமைத்துவத்தின் பதில்** ஒப்பந்தத் பொதிக்கான கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் எரிபொருள் பற்றாக்குறையால் தாமதங்கள் ஏற்பட்டது, பூர்த்தி செய்தல் திகதி 2023 திசெம்பர் 28 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மண்சரிவுகள் மற்றும் மேலதிக பணிகள், பாதகமான வானிலை போன்றவற்றால் ஏற்பட்ட தாமதங்கள் இரண்டாவது கால நீட்டிப்புக்கான காரணங்களாகும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை கால எல்லைக்குள் அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வில் எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

**(ii) காணி சுவீகரிப்பு**

| கூறு | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் காணித் துண்டுகள் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் காணித் துண்டுகள் | | |
| காணி சுவீகரிப்பு | உரிமைத்துவத்தை பதிவு செய்தல் | 5,593 | 749 | செயற்திட்டத்தின் மூலம் 5,593 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன், 2,177 காணித்துண்டுகளுக்கு ரூபா 540.67 மில்லியன் இழப்பீடு மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட்டுள்ளது. எனினும், காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் உட்பிரிவின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 749 காணித்துண்டுகள் மாத்திரமே | காணி சுவீகரிப்பு செயன்முறையில் செயற்திறனின்மை மற்றும் நிதிப் பற்றாக்குறை. |

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட்டதற்கான இழப்பீட்டு கொடுப்பனவில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக வட்டியாக ரூபா 166.29 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**முகாமைத்துவத்தின் பதில்** இழப்பீடு மற்றும் வட்டி செலுத்தப்பட்ட தனியார் காணித்துண்டுகளிற்கு மாத்திரமே பதிவு செய்யப்படுகிறது. காணி பதிவு பிரதேச செயலகங்களால் மேற்கொள்ளப்படுகிறது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வின் போது காணி சுவீகரிப்பு மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் தொடர்பாக எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

லுணுகல முதல் பிபிலை வரையிலான (171+800 கிமீ 190 + 800 கிமீ) பொதி ஒப்பந்ததாரர் ஒருவருக்கு 2017 யூன் 12 இல் ரூபா 2006.43 மில்லியனிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த காலப்பகுதி 30 மாதங்களாகும். ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் மற்றும் இணங்கப்பட்ட கால எல்லைக்குள் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய இயலாமை காரணமாக பௌதீக முன்னேற்றம் 60.32 சதவீதமாக இருந்த போது 2021 யூன் 29 இல் ஒப்பந்தம் மூடப்பட்டது. இந்த செயற்திட்டம் ஒப்பந்தத்தை முடிக்கும் போது ஒப்பந்ததாரருக்கு ரூபா 1,204.95 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஒப்பந்ததாரர் மற்றும் தொழில்தருநர் இருவரும் உடன்படும் நோக்கத்துடன் ஒப்பந்தத்தை மூடுவது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை சட்டமா அதிபர் திணைக்களத்தின் கருத்தைக் கோரியிருந்த போதிலும், FIDIC நிபந்தனைகளின் ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் 15 ஆம் பிரிவு ஒப்பந்தத்தின் “பரஸ்பர முடிவுறுத்தலிற்கு“ ஏற்பாடுகளை வழங்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதனால், ஒப்பந்த நிபந்தனைகளின் 15 ஆம் பிரிவு மற்றும் சட்டமா அதிபரின் கருத்தின் பிரகாரம் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கையை எடுத்திருக்காதமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றலிற்காக தொழில்தருநரால் ஒப்பந்தம் முடிவுறுத்தல் வழங்கப்பட்ட போதிலும் செயலாற்றல் விலகல் ஒப்பந்ததாரரால் முற்றிலும் கண்டுபிடிக்க கடினமாக உள்ளதால் முடிவுறுத்தல் செய்யப்படுவதைத் தொழில்தருநர் தொடரவில்லை. ஆனால் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தில் உள்ள அனைத்து தரப்பினரும், பாதகமான தட்பவெப்ப நிலை, உயிர்த்த ஞாயிறு வெடிகுண்டு தாக்குதல் மற்றும் கொவிட்-19 தொற்றுநோய் பரவல் போன்ற வெளிப்புற காரணிகள் செயலாற்றலை பாதிக்கின்றதுடன் பரஸ்பர முடிவுறுத்தலிற்கு | ஒப்பந்த நிபந்தனைகள் இருந்து விலகல் குறித் விசாரணை நடாத்தப் வேண்டும். மேலு அரசாங்கத்திற்கு ஏற்ப நட்டங்கள் தொடர்ப தாபன விதிக்கோவையின் ஆம் பிரிவின் பிரகா ஒழுக்காற்று நடவடிக்கைச எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பரிந்துரைக்கப்படுகின்றன. எனவே, ஒப்பந்ததாரரால் ஒப்பந்தத்தை முற்றிலும் மீறுவது கண்டறியப்படவில்லை. மேலும் ஒப்பந்தத்தின் பிரகாரம் முடிவுறுத்தலை அமுல்ப்படுத்துவதற்கும், வயதுக்கு ஏற்ப பரஸ்பர முடிவுறுத்தலுடன் தொடருவதற்கும் எந்த காரணமும் இல்லை. | |
| (ii) | 2022 நவம்பர் 17 ஆம் திகதிய மேற்படி சட்டமா அதிபரின் கடிதத்தின் பிரகாரம் ஒப்பந்ததாரரின் தவறு காரணமாக பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2021 யூன் 12 இல் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்ட பணிகளை பொறியியலாளர் கையேற்றிருந்த போதிலும் 2022 யூலை 31 இல் முடிவடையும் செயலாற்றல் உத்தரவாதத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைவதற்குள் ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகளின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கு செயற்திட்டம் நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. எனவே, இந்த தாமதமானது ஒப்பந்த நிபந்தனைகளின் மீது செயற்படுவதற்கும் அதன் இழப்புக்களைக் குறைப்பதற்கும் RDA அதன் திறனை இழந்திருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | அந்த நேரத்தில் கிடைத்த தகவலின் பிரகாரம் ஆரம்ப புரிந்துகொள்ளல் இருந்த போதிலும், ஒப்பந்தம் மெதுவாக செயற்படுகிறது. எனினும், பேருந்து விபத்து நடந்த பின்னர், கூடிய விரைவில் வீதியை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் தொழில்தருநர் மற்றும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனையை முழுமையாகக் கருத்தில் கொண்டு வழக்கின் விரிவான ஆய்வுக்குப் பின்னர் குறித்த உயர்தரக் குழு பரிந்துரைத்தவாறு பரஸ்பரமுடிவுறுத்தலை தொடர்வதற்கு தொழில்தருநர் திட்டமிட்டார்.<br><br>பிரச்சனைகளை பரஸ்பரம் தீர்த்துக்கொள்வதே சிறந்த வழி, வழக்காடாமல் எதிர்கொள்ளும் விளைவுகளுக்கு ஏற்றவாறு பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு, அவ்வாறு மின் நிர்மாணம் தாமதமாகி, வீதியை நிறைவு செய்யும் நோக்கமும் பயணிகளும் ஆபத்தில் உள்ளனர். | ஒப்பந்த நிபந்தனைகளில் இருந்து விலகல் குறித்து விசாரணை நடாத்தப்பட வேண்டும். மேலும் அரசாங்கத்திற்கு ஏற்படும் நட்டங்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் II ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 2022 ஏப்ரலிற்குள் ஒப்பந்தம் முடிவடைவது குறித்த தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், 2020 சனவரி 25 இன் அசல் பூர்த்தி செய்தல் திகதியின் பிரகாரம் வேலையின் பௌதீக முன்னேற்றம் 35.3 சதவீதமாக இருந்ததுடன் திருத்தப்பட்ட பூர்த்தி செய்தல் திகதியான 2021 யூன் 23 வரையிலும் வேலை | கணிசமான கால அவகாசம் எடுத்து விரிவான பகுப்பாய்விற்குப் பின்னர் தரப்பினர் எதிர்கொள்ளும் பிரச்சனையுடன் இந்த விடயம் முழுமையாக கருத்தில் கொள்ளப்பட்டது. வழக்கின் பின்னணியில் காரணம் அளவு அதிகரிப்பு, பாதகமான தட்பவெப்ப நிலை, உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல், | ஒப்பந்த நிபந்தனைகளில் இருந்து விலகல் குறித்து விசாரணை நடாத்தப்பட வேண்டும். மேலும் அரசாங்கத்திற்கு ஏற்படும் நட்டங்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் II ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று |

| | | | |
|---|---|---|---|
| | முன்னேற்றம் 60.3 சதவீதம் மாத்திரமே ஆகும். எனவே கடந்த 17 மாதங்களாக ஒப்பந்ததாரர் செய்த பணிகள் அசல் பூர்த்தி செய்தல் திகதியிலிருந்து நீடிக்கப்பட்ட பூர்த்தி செய்தல் திகதி வரை 25 சதவீதம் மாத்திரமே காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எனவே, RDA இன் நடவடிக்கைகள் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் 15 ஆம் பிரிவின் கீழ் முடிவுறுத்தலிற்கான உரிமைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக ‘பரஸ்பர முடிவுறுத்தலை’ பரிந்துரைத்துள்ளன என்பது தெளிவாகத் தெரியவில்லை. | கொவிட்-19 தொற்றுநோய் பரவல் போன்றவை ஆகும். அதன் பிரகாரம் செயலாளரால் ஒரு TEC நியமிக்கப்பட்டு இந்த விடயம் ஆராயப்பட்டு இணங்கப்பட்ட திகதிகளில் தொழில்தருநர் மற்றும் ஒப்பந்ததாரர் இருவரின் உடன்பாட்டுடன் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு பரிந்துரைத்தார். மேலும், மேலுள்ளவை தொடர்பாக கௌரவ சட்டமா அதிபரின் கருத்தையும் பெற வேண்டும் என அதே குழு வலியுறுத்தியது. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | மேற்படி பொதி இரண்டு பொதிகளாக ரூபா 2,919.56 மில்லியன் மொத்த மதிப்பீட்டில் மீதிப் பணிகளுக்காக அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவிலிருந்து அமைச்சு பெறுகைக் குழு வரை அதிகார மட்டத்தைக் குறைத்து மீள்கேள்வி கோரப்பட்டது. நியாயமான காரணங்களுக்காகப் பிரிப்பது அவசியமானதாகக் கருதப்பட்ட போதிலும் பெறுகை கையேட்டின் அத்தியாயம் 4.4.2 இன் பிரகாரம் பிரிப்பதற்கு முன்னர் அத்தகைய கொள்வனவை மேற்கொள்வதற்கு உரிய அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கும் பெறுகைக் குழுவால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் ஒப்பந்தத்தை பிரிப்பதற்காக அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்யும் நோக்கத்துடன், நடந்துகொண்டிருக்கும் செயற்திட்டங்களுக்காக அமைச்சரவை நியமித்த குழுவின் அங்கீகாரத்துடன் இரண்டு பொதிகளாக பிரித்து அமைச்சின் கோரிக்கையின் பேரில் நன்கொடை முகவர் அதை ஏற்றுக்கொண்டது, அதன் பிரகாரம் பெறுகை பணிகள் பெறுகை கையேட்டின் பிரகாரம் அமைச்சின் பெறுகைக் குழுவின் (MPC) அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன. | பெறுகை வழிகாட்டலின் நிபந்தனைகளுடன் இணங்காதமை குறித்து விசாரணை நடாத்தப்பட வேண்டும். மேலும் முறைகேடுகள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் II ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (v) | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு 2021 திசெம்பரில் அவர்களின் அறிக்கையின் பிரகாரம் RDA இற்கும் முன்னைய ஒப்பந்ததாரருக்கும் இடையே பரஸ்பர முடிவுறுத்தல் உடன்படிக்கை கையெழுத்தான பின்னர், தெரிவுசெய்யப்பட்ட புதிய கேள்விதாரருக்கு | சட்டமா அதிபரின் கருத்து நிலுவையில் உள்ள நிலையில் குறித்த உடன்படிக்கையில் கையொப்பமிடுவது தாமதமாகியது. எனினும், முந்தைய ஒப்பந்ததாரரிடம் உள்ள முழு வீதிப் பகுதி உடைமையும் RDA ஆல் திரும்பப் பெறப்பட்டது, மேலும் | TEC பரிந்துரைகளை நிராகரிப்பது தொடர்பாக பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக தாபன விதிக்கோவையின் II ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | மீள்கேள்வி பொதிகளை (03B மற்றும் 03C) வழங்குவதற்கு பரிந்துரைத்திருந்த போதிலும், அமைச்சு பெறுகைக் குழு 2022 சனவரி 03 இல் சம்பந்தப்பட்ட TEC வழங்கிய பரிந்துரையுடன் இணங்காமல் மீதி வேலை ஒப்பந்தங்களை வழங்க முடிவு செய்திருந்ததுடன் இந்த விலகலிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. | முந்தைய ஒப்பந்ததாரருடன் எந்த சர்ச்சையும் காணப்படவில்லை. எனவே, உடைமை தொடர்பாக எந்த சர்ச்சையும் காணப்படாததுடன் பேருந்தின் அபாயகரமான விபத்துடனான நிலைமை ஏற்பட்ட பின்னர் சிக்கலைத் தணிக்கும் வகையில் பிரிவை விரைவாக பூர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்திற்காக ஒப்பந்தம் வழங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. | எடுக்கப்பட வேண்டும். |
| (vi) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின் பிரகாரம், ஆரம்ப ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும் வரை ஏற்பட்ட கிரயம் ரூபா 1,241.24 மில்லியனாக இருந்ததுடன் முழு ஒப்பந்தத்தையும் பூர்த்தி செய்வதற்கு மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 4,160.80 மில்லியன் ஆகும். எனவே ஒப்பந்தத்தின் அசாதாரண தாமதம் மற்றும் தவறான முகாமைத்துவம் செயற்திட்டச் செலவை கணிசமாக மீறுவதற்கு நேரடியாகப் தாக்கமளிக்கும். மேலும், இந்த விடயம் தொடர்பாக 2022 நவம்பர் 17 ஆம் திகதிய சட்டமா அதிபரின் பீசீஎல;/44/22/ஆர்டிஏ ஆம் இலக்க கடிதத்திலும் வலியுறுத்தப்பட்டது. | தரப்பினரும் பொது மக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தணிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையே மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு பரஸ்பர முடிவுறுத்தலாக உள்ளதுடன் அதன் பிரகாரம் செயற்படுதல் ஆகும். நிலைமையை முகாமை செய்வதற்கு இது சிறந்த வழியாகும். போட்டி கேள்வியை அழைத்த பின்னர் MPC இன் தேவையான அங்கீகாரம், நன்கொடையாளர் இணக்கப்பாடு மற்றும் RDA இன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் ஆகியவற்றுடன் இரண்டு ஒப்பந்தங்களை மீள கேள்வி கோரிய பின்னர் மிகவும் பதிலளிக்கக்கூடிய குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கேள்வியுடன் புதிய ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டது.<br><br>வேலையின் புதிய நோக்கெல்லையின் பிரகாரம் மேலே கோரப்பட்டவாறு பூர்த்தி செய்வதற்கு முறையான பெறுகை நடைமுறைக்கு ஏற்ப புதிய கேள்வி அழைக்கப்பட்டது, இது குறைந்த செலவாகும். | பெறுகை மற்றும் செயற்திட்டச் செலவை சிக்கனமின்றி மீறுவது உட்பட முழு செயன்முறை குறித்தும் முறையான விசாரணை நடாத்தப்பட வேண்டும். மேலும், அந்த முரண்பாடுகள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் II ஆம் பிரிவின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் ஐ.அ.டொலர் 140 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த செயற்திட்டம் ஐ.அ.டொலர் 97.58 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியுள்ளது. எனவே, செயற்திட்டத்தின் லுணுகல முதல் பிபிலை வரையிலான பாதையின் மீதிப் பணிகள் தவிர்ந்த ஐ.அ.டொலர் 42.42 மில்லியனிற்கு சமமான 30.30 சதவீதமானது அசல் நோக்கெல்லை பூர்த்தியடைந்த பின்னரும் எஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், அடுத்த சில ஆண்டுகளில் மீதமுள்ள கடன் நிலுவையைப் பயன்படுத்துவது தொடர்பான வேலைத் திட்டம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதியில் OPEC ஐ.அ.டொலர் 43.87 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 34.99 மில்லியன் ஆகியவற்றை அசல் பணியின் நோக்கெல்லை பூர்த்தியடைந்த பின்னர் வழங்கியது. ஐ.அ.டொலருக்கு நிகரான ரூபாய் பெறுமதியின் சரிவு மற்றும் செயற்திட்ட சேமிப்புக்கள் ஆகியவை கடன் சேமிப்புக்கான முக்கிய காரணங்களாகும். OFID இன் சேமிப்பு பெரகல - வெல்லவாய வீதி செயற்திட்டம் மற்றும் சாய்வு காலநிலை மீட்சி செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. SFD இன் ஐ.அ.டொலர் 12.00 மில்லியன் ஏற்கனவே அமைச்சரவை முடிவின் அடிப்படையில் நானாவித வெளிநாட்டு உதவி நிதி செயற்திட்டத்திற்கு (MFAP) மாற்றப்பட்டுள்ளது. SFD இன் மிகுதி சேமிப்பு அம்பாறை - உஹன - மாஓயா 25 கிமீ செயற்திட்டத்திற்கும் செங்கலடி சந்தியை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. | செயற்திட்டத்தின் குறித்துரைத்த இலக்குகளை கால எல்லைக்குள் அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வின் போது நிதி பயன்பாடு தொடர்பாக எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |